# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

**අංක 2218/68 - 2021 මාර්තු මස 12 වැනි සිකුරාදා - 2021.03.12**

*2218/68 ஆம் இலக்கம் – 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 11/79* (iii)

**1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்**

*அரசியலமைப்பின் 4 ஆம் உறுப்புரையின் (ஆ) என்னும் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி*

கொழும்பு,
*2021, மாச்சு 09.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (வன்முறையான மட்டுமீறிய மதக்கொள்கையைக் கொண்டிருப்பதற்கெதிரான தீவிரமயமற்றதாக்குதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இவ்வொழுங்கு விதிகளின் குறிக்கோளானது, இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் சரணடைகின்ற அல்லது ஒன்றில் பேசப்பட்ட அல்லது வாசிப்பதற்கு உட்கருதப்பட்ட சொற்கள் மூலம் அல்லது சைகைகள் மூலம் அல்லது புலப்படத்தக்க பிரதிநிதித்துவங்கள் மூலம் அல்லது வேறு வகையாக, வெவ்வேறு சமுதாயத்தினரிடையே அல்லது இன அல்லது மதத் தொகுதியினரிடையே வன்முறையான அல்லது மத, இன அல்லது சமுதாயச் சுமுகமின்மைச் செயல்கள் புரியப்படுதலை அல்லது தீய எண்ண அல்லது பகைமை உணர்ச்சிகளை விளைவிக்கின்ற அல்லது விளைவிப்பதற்கு உட்கருதுகின்ற ஆளொருவராகவுள்ளாரென்ற சந்தேகத்தின் மீது கட்டுக்காப்பினுள் எடுக்கப்படுகின்ற எவரேனுமாளுக்கு எதிராகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை


1A - G 33931 — 380 (2021/03)


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

எடுக்கப்படுவதனையும், இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் எந்நேரத்திலும் வலுவிலிருந்த ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நியதிகளின்படி சரணடைந்துள்ள அல்லது கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்டுள்ள ஆட்கள், இவ்வொழுங்கு விதிகளின் நியதிகளின்படி எத்தகைய பராமரிப்பை மற்றும் பாதுகாப்பை அவர்கள் முன்னதாக அனுபவித்துக் கொண்டிருந்தார்களோ அதே பராமரிப்பை மற்றும் பாதுகாப்பைத் தொடர்ந்து அனுபவிப்பதனையும் உறுதிப்படுத்துவதற்கானதாக இருத்தல் வேண்டும்.

3. எவரேனும் பொலிசு அலுவலரிடம் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரிடம் அல்லது கட்டளை மூலம் சனாதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரிடம், அல்லது வேறெவரேனும் ஆளிடம் அல்லது ஆட்கள் குழுவிடம்,-

(அ) சட்டத்தின் அல்லது 2019 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதிய 2123/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (மட்டுமீறிய ஒழுங்கமைப்புகளைத் தடைசெய்தல்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் தவறு சம்பந்தமாகச் சரணடைகின்ற அல்லது சரணடைந்துள்ள அல்லது அவர்களினால் கட்டுக்காப்பினுள் எடுக்கப்படுகின்ற அல்லது எடுக்கப்பட்டுள்ள ; அல்லது

(ஆ) 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதிய 2120/ 5 ஆம் இலக்க அதவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் தவறு சம்பந்தமாகச் சரணடைந்துள்ள அல்லது அவர்களினால் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்டுள்ள,

எவரேனும் ஆள் இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஒரு புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

4. அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், சரணடைந்தோருக்கும் மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோருக்கும் புனர்வாழ்வளிக்கும் நோக்கத்திற்காக (இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மீள ஒன்றிணைத்தல் நிலையங்கள்" என அறியப்பட வேண்டியக நிலையங்களைக் காலத்துக்குக்காலம் அங்கீகரித்தல் வேண்டும். அத்தகைய அங்கீகாரத்தின் மேல் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியானவர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களின் வகுதியையும் இடத்தையும் குறித்துரைத்தல் வேண்டும்.

5. (1) மூன்றாம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி ஆளொருவர் பொலிசு அலுவலர் ஒருவர் தவிர்ந்த எந்த ஆளிடம் சரணடைகின்றாரோ அல்லது ஆளொருவர் எந்த ஆளினால் கட்டுக்காப்பினுள் எடுக்கப்படுகின்றாரோ அந்த எவரேனும் ஆள், அவ்வாறு சரணடைந்ததிலிருந்து அல்லது கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்டதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குள்ளாக அத்தகைய சரணடைந்தவரை அல்லது கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட ஆளை மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(2) மூன்றாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சரணடைந்தவர் ஒருவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் ஒருவர் 3 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணமுள்ளவிடத்து, அத்தகைய சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் எந்தப் பொலிசு நிலையத்தில் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகின்றாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், புலனாய்வொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக, சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தகைய சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் தடுத்து வைக்கப்படுதல் வேண்டுமா என்பதைக் கவனத்துட்கொள்வதற்காக அமைச்சருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) அத்தகைய சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் 3 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புரிந்துள்ளாரென அத்தகைய புலனாய்வின்போது வெளிக்காட்டப்படுமிடத்து, அவ்விடயமானது சட்டத்தின் நியதிகளின்படி தோதான நடவடிக்கைக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) புரியப்பட்ட தவறின் தன்மைக்கிணங்க சரணடைந்தவர் ஒருவருக்கு அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் ஒருவருக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடுப்பதற்குப் பதிலாக நிலையமொன்றில் அவருக்குப் புனர்வாழ்வளிக்கப்படுதல் வேண்டுமெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர், சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான அங்கீகாரத்துடன் நீதிவானொருவர் முன்னர் நிறுத்தப்படுதல் வேண்டும். நீதிவானானவர், 3 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் அல்லாத வேறேதேனும் தவறை அத்தகைய சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் புரிந்துள்ளாராவென்பதைக் கவனத்திற்கொண்டு, ஒரு நிலையத்தில் ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காக அவரைப் புனர்வாழ்வுக்காக ஆற்றுப்படுத்திக் கட்டளையாக்கலாம்.

*6. (1) ஐந்தாம் ஒழுங்குவிதியின் (4) ஆம் உப ஒழுங்குவிதியின் கீழ் ஒரு நீதிவானின் கட்டளையொன்றின் மூலம் புனர்வாழ்வுக்காக ஆற்றுப்படுத்தப்படுகின்ற எவரேனும் சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர், புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்துக்குக் குழப்பமேற்படுத்துகின்ற அல்லது நிலையத்தில் புனர்வாழ்வளிக்கப்படுதலின் கீழுள்ள ஏனைய சரணடைந்தோரின் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோரின் அக்கறைகளுக்குத் தீங்குவிளைவிக்கின்ற ஒரு முறையில் செயலாற்றுமிடத்து, புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய சரணடைந்தவருக்கு அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவருக்குப் புனர்வாழ்வளிப்பதற்காகப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள எந்த அலுவலர் நீதிவானுக்கு விண்ணப்பித்தாரோ அந்த அலுவலருக்கு அதுபற்றி எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.*

*(2) இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் உப ஒழுங்குவிதியின் கீழ் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து தகவல் பெறப்பட்டதன் மேல், அத்தகைய சரணடைந்தவருக்கு அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவருக்குப் புனர்வாழ்வளிப்பதற்காகப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள எந்த அலுவலர், நீதிவானுக்கு விண்ணப்பித்தாரோ அந்த அலுவலர், புனர்வாழ்வுக்கான கட்டளையை இல்லாதொழிக்கும்படியும் புனர்வாழ்வளிக்கப்படுதலுக்குப் பதிலாக அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்றம்பகரப்பட வேண்டுமாவென்பதைக் கவனத்திற்கொள்வதற்கு அவ்விடயத்தைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தும்படியும் நீதிவானுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.*

*7. (1) ஐந்தாம் ஒழுங்குவிதியின் (4) ஆம் உப ஒழுங்குவிதியின்கீழ் நீதிவானினால் ஆக்கப்பட்ட கட்டளையில் சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் ஒருவர் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட புனர்வாழ்வுக் காலப்பகுதியின் முடிவில், புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய சரணடைந்தவரின் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவரின் புனர்வாழ்வளித்தலின் தன்மையையும் முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு, சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் விடுதலை செய்யப்படுவது அல்லது மேலுமொரு புனர்வாழ்வுக் காலப்பகுதிக்கு உட்பட்டவராகவிருப்பது தோதானதாகவுள்ளதாவென்பதைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அவரது விதப்புரையை அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு உடனடியாகச் சமர்ப்பித்தலும் வேண்டும். செயலாளரானவர் அத்தகைய அறிக்கையை உடனடியாக அமைச்சருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.*

*(2) அமைச்சரானவர், இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் உப ஒழுங்குவிதியின் கீழ் அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை நுனித்தாராய்ந்த பின்னர்,-*

*(அ) அத்தகைய சரணடைந்தவரை அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவரை விடுதலை செய்யும்படி கட்டளையிடலாம் ; அல்லது*

*(ஆ) ஒரு தடவையில் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிகளுக்குப் புனர்வாழ்வுக் காலப்பகுதியை நீடிக்கலாம் ; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நீடிப்புகளின் கூட்டுமொத்தக் காலப்பகுதியானது மேலுமொரு பன்னிரெண்டு மாதங்களை விஞ்சுதலாகாது. அத்தகைய ஒவ்வொரு நீடிப்பும் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரையின் மீது செய்யப்படுதல் வேண்டும்.*

*(3) சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர், நீடிக்கப்பட்ட புனர்வாழ்வுக் காலப்பகுதியின் முடிவில் விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.*

*8. (1) புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியானவர், சரணடைந்தவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் ஒருவரின் புனர்வாழ்வுக் காலப்பகுதியின்போது, அத்தகைய ஆள் சமுதாயத்திற்கும் சமூகத்திற்கும் மீண்டும் ஒன்றிணைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவருக்கு உள-சமூக உதவியையும் தொழில்சார் மற்றும் வேறு பயிற்சியையும் வழங்குதல் வேண்டும்.*

*(2) புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியானவர், சரணடைந்த அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஒருவரைப் புனர்வாழ்வுக்காக ஒப்படைக்கின்ற திகதியிலிருந்து ஒவ்வொரு மூன்று மாதமும், அத்தகைய ஆள் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மையும் முன்னேற்றமும் பற்றிய அறிக்கையொன்றை அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். செயலாளரானவர் அத்தகைய அறிக்கையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(3) புனர்வாழ்வுக்காக ஒரு நிலையத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட சரணடைந்தவர் ஒருவர், அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் ஒருவர், நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் அனுமதியுடன், விடயத்திற்கேற்ப, அவரது பெற்றோர், உறவினர்கள் அல்லது பாதுகாவலரை இரு வாரங்களுக்கொரு தடவை சந்திப்பதற்கு உரித்துடையவராகவிருக்கலாம்.*

9. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என்று பொருளாகும் ;

"புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும் ;

"தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்" என்பது, 3 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் கட்டுக்காப்பினுள் எடுக்கப்படுகின்ற அல்லது எடுக்கப்பட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும் ;

"அமைச்சர்" என்பது, பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும் ;

"சரணடைந்தவர்" என்பது, 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் சரணடைகின்ற அல்லது சரணடைந்துள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்.

*03-757*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.